[27th December 1956

Sri M. KALYANASUNDARAM: On a point of information Sir, இந்தப் பிரச்னை மிக முக்கியமானதாக இருப்பதினாலே, இதுபற்றி முடிவு எடுப்பதற்கு முன்பாக அடுத்த சட்ட சபை முன்பு இந்தப் பிரச்னையை கொண்டுவந்து சட்ட சபையின் அபிப்பிராயத்தையும் அறிந்து கொண்டு பிறகு சர்க்கார் அதுபற்றி ஒரு முடிவு எடுப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: சர்க்கார் சொன்ன ஆலோசனையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

Additional sales-tax on sugar

* 439 *Q.*—**Sri V. BALAKRISHNAN:** Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount of revenue realized by the imposition of additional sales-tax on sugar at one anna per rupee at the first point of sale from the date of levy to the end of October 1956; and

(*b*) the amount of revenue realized by the levy of General Sales Tax on sugar at three pies per rupee for the period from May to the end of October 1956?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) Rs. 22,34,018 approximately.

(*b*) Rs. 6,31,107 approximately.

Sri V. BALAKRISHNAN: நமக்கு இந்தத் திட்டத்தின்கீழ் பூராவாக வரவேண்டிய தொகை வரவில்லை என்பது மந்திரி அவர்களுக்கு தெரியவருமா ? அது விஷயமாக சென்னை வியாபாரிகள் புகார் செய்திருக்கிறார்கள். அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

The Hon. Sri M. A. MANICKAVELU: பூராவாக வரவேண்டிய தொகை எவ்வளவு என்பது எனக்குத் தெரியாது. அதனாலே அதிலிருந்து கழித்து நான் சொல்வதற்கில்லை. ஏதோ இந்த அகதிகள் சலுகையை நல்ல வகையிலே உபயோகப்படுத்தாமல் அதில் தில்லுமல்லுகள் செய்கிறார்கள் என்ற விஷயம் மாத்திரம் எனக்குத் தெரியவந்திருக்கிறது. இந்த விஷயங்களெல்லாம் ஆராச்சியில் இருக்கின்றன.

Sri N. K. PALANISAMY: வெளி மாகாணங்களிலிருந்து திருட்டுத்தனமாக லாரிகளில் ஏராளமான சர்க்கரை கொண்டு வருகிறார்கள். சர்க்கார் அதன்மீது சரிவர வரியை வசூல் செய்ய முடியவில்லை. ஆகவே இம்மாதிரி திருட்டுத்தனமாக ஆங்காங்கு சவுக்கிகளை வைத்து தடை செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: இம்மாதிரி திருட்டுத்தனமாக கொண்டுவரப்படும் சர்க்கரையை தடை செய்வதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Sri V. BALAKRISHNAN: சர்க்கரை விற்கும் இடங்கள் சர்க்காரிடம் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா ? அந்த இடங்களில் தினந்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும் எவ்வளவு மூட்டைகள் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன என்பதை கணக்கெடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri M. A. MANICKAVELU: வாலாயமாக வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்கள்தான் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். புதிதாக அங்கேயிருந்து ஓடிவந்த அகதிகளுக்கு ஸ்திரமான ஒரு இடமில்லை என்று எனக்குத் தெரியவருகிறது. இந்த விஷயத்தையும் இன்னும்

27th December 1956]

மற்ற விஷயங்களையும் ஆலோசித்துப் பார்த்து, என்ன செய்தால் இவைகளையெல்லாம் தீர்க்கலாம் என்ற விஷயம் இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

SRI S. RAMALINGAM : சர்க்கரைக்கு புதிதாக ஒரு முனையில் போட்டிருக்கக்கூடிய ஒரு அணு வரியை கொடுக்கமுடியாமல் வியாபாரிகளுக்கும் பொது மக்களுக்கும் சர்க்கரை ரொம்ப கசந்துவிட்டது என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்கரை எப்பொழுதுமே கசக்காதே. (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : சில சமயங்களில் கசக்கும் அதுபற்றி நம் புலவர்கள்கூட பாடியிருக்கிறார்கள். (சிரிப்பு.)

Illegal manufacture of crackers

* 440 *Q.*—SRI P. RANGASAMY REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any Police raid was made at Tiruchirappalli on 29th October 1956 to detect cases of illegal manufacture of crackers and explosives just before Deepavali;

(*b*) whether any Policemen were seriously injured during the raid; and

(*c*) the number of cases of illegal manufacture detected during that week and the action, if any, taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir. Five Police officers were injured. A Sub-Inspector and a Police constable received serious injuries and an Inspector, a Head constable and a Police constable received simple injuries.

(*c*) Three cases were detected and investigation is proceeding.

SRI P. RANGASAMY REDDIAR : இதிலே சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு ஒரு கண் பாதிக்கப்பட்டு அதை அவர் உபயோகப்படுத்த முடியவில்லை. நம் நாட்டில் பல இடங்களில் இம்மாதிரி illegal-ஆக பட்டாசு தயாரிக்கப்படுவதை முன் எச்சரிக்கையாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது பெரிய அளவில் திருச்சியில் manufacture செய்யப்பட்டது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுபற்றி இன்னும் புலன் விசாரணை நடந்து வருகிறது. பூரா தகவலும் எனக்கு கிடைக்கவில்லை. சச்சிதானந்தம் என்ற ஒரு சப்-இன்ஸ்பெக்டரின் கண் கெட்டுப்போய்விட்டது.

SRI K. VINAYAKAM : ஒவ்வொரு தீபாவளி விழா முடிந்த பிறகு டபாசு வெடித்து இங்கே குழந்தை இறந்தது. அங்கே ஒருவன் மடிந்தான் இங்கே ஒருவன் மடிந்தான் என்றெல்லாம் பத்திரிகையில் படிக்கிறோம். ஆண்டுதோறும் இம்மாதிரி செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. டபாசு வெடி இல்லாமலே நம் மக்கள் வாழமுடியாது என்று சொல்லமுடியாது. ஆகவே, manufacture of crackers பூராவையும் ban செய்துவிட்டு இதனால் வருகிற தொல்லைகளையெல்லாம் தடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?